# சமூகத் தொடர்பாடலின் தளமாக சனசமூக நிலையங்கள்

**சதங்கனி, ச. ரகுராம், சி.,[1] சிவப்பிரியா, சி[2]**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.[1]
மொழிகள் மற்றும் தொடர்பாடல் கற்கைகள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.[2]
sathangani11@gamil.com

*ஒரு சமூகத்தில் முன்னைய காலங்களில் சமூகத் தொடர்பாடலைப் பேணுவதில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு அதிகமாகக் காணப்பட்டது. அந்தவகையில் சனசமூக நிலையங்கள் சமூகத் தொடர்பாடலின் தளமாக இருந்ததுடன் மக்களை சமூக மயப்படுத்தும் பணியையும் ஆற்றி வந்தன. ஆனால் தற்காலத்தில் அந்த நிலை மாறி சமூகத் தொடர்பாடலை பேணுவதற்கு சனசமூக நிலையங்கள் தளமாக இருக்கின்றனவா என்பது கேள்விக்குரிய விடயமாக மாறிவிட்டது. எனவே "சமூகத் தொடர்பாடலின் தளமாக சனமூக நிலையங்கள்" எனும் தலைப்பில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்விற்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பாக இயங்குகின்ற 10 சனசமூக நிலையங்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு சமூகத் தொடர்பாடலுக்கான தளமாக அவை எவ்வாறு செற்படுகின்றன என்பது தொடர்பில் ஆய்வாளரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்தவகையில் சனசமூக நிலையங்களின் உருவாக்கத்தின் முக்கியத்துவம், சனசமூக நிலையங்கள் மக்களின் தொடர்பாடல் தளமாக எவ்வாறு பேணப்படுகின்றன, சனசமூக நிலையங்கள் சமூகத் தொடர்பாடலுக்கு ஆற்றும் பங்களிப்புகள், சனசமூக நிலையங்கள் வழியாக சமூகத் தொடர்பாடலை மேற்கொள்ளும் போது இருக்கக் கூடிய சவால்கள், சனசமூக நிலையங்கள் சமூகத் தொடர்பாடலுக்கு ஊடகங்களைப் பயன்படுத்தும் விதம் என்பன தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெறுதிசார் ஆய்வாக மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்விற்கு தேவையான தரவுகளானவை அவதானம், நேர்காணல், சனசமூக நிலையம் சார்ந்து வெளிவந்த சஞ்சிகைகள் மற்றும் சனசமூக நிலையங்களினுடைய சமூக ஊடகப் பக்கங்கள் என்பவற்றின் மூலம் திரட்டப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டது. சனசமூக நிலையங்கள் மக்களை ஒன்றிணைத்து தொடர்பாடலை மேற்கொள்கின்றன, மக்களுடைய தொடர்பாடல் தளமாக காணப்படுகின்றன, சமூகத் தொடர்பாடலுக்கு பங்காற்றுகின்றன, சமூகத் தொடர்பாடலுக்காக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றன. என்பவற்றின் அடிப்படையில் தற்காலத்திலும் சமூகத் தொடர்பாடலின் தளமாக சனசமூக நிலையங்கள் விளங்குகின்றன என்பது ஆய்வின் முடிவாக கிடைக்கப்பெற்றுள்ளது.*

**திறவுச் சொற்கள் :** சமூகத் தொடர்பாடல், சனசமூக நிலையம், யாழ்ப்பாணம், தொடர்பாடல்